**கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண்.  254/2022**

**வா.சா.1 – தேவகி**

**17–02–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு  முதல் விசாரணை தொடர்ச்சி.**

கீழ்கண்ட ஆவணங்கள் வாதி தரப்பில் குறியீடு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.19 | ஜீவானந்தத்தின் இறப்பு சான்றிதழ் | கணினி நகல் |
| 2. | வா.சா.ஆ.20 | வருவாய் கோட்டாட்சியர் வாரிசு சான்றிதழை ரத்து செய்து பிறப்பித்த உத்தரவு | உண்மை நகல் |

(முதல் விசாரணை முடிக்கப்பட்டது)

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது தாயார் பெயர் மகாலட்சுமி. அவரது வாரிசு சான்றிதழை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஜீவானந்தம் எனது தகப்பனார். ஜீவானந்தத்தின் பெற்றோர்கள் பெயர் என்ன என்றால் அவினாசியப்பன் மற்றும் பொன்னம்மாள். அவர்களது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.  அவிநாசி அப்பன் மற்றும் பொன்னம்மாள் எந்த வருடம் இறந்தார்கள் என்பதை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் தெரியவில்லை எனது சித்தப்பாவிடம் தான் கேட்க வேண்டும். 3ம் பிரதிவாதி ஜோதிமணியை எனது தகப்பனார் எந்த வருடம் திருமணம் செய்தார் என்றால் 1987 ஆம் ஆண்டு திருமணம் செய்தார். ஜோதிமணி 2வது மனைவியா அல்லது மகாலட்சுமி 2வது மனைவியா என்பதை காண்பிப்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது தாயார் மகாலட்சுமி தான் முதல் மனைவி என்பதை காண்பிப்பதற்கு அவரது திருமண புகைப்படம் உள்ளது.

2. எனது தாய் தந்தையரின் குடும்ப அட்டையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2012 ஆம் ஆண்டு இறந்த எனது தகப்பனாருக்கு நான் ஏன் இன்றும் வாரிசு சான்றிதழ் வாங்காமல் உள்ளேன் என்றால் எனது சகோதரர் வாரிசு சான்றிதழ் வாங்கி இருப்பார் என்று இருந்தேன். எனது சகோதரர் எனது தகப்பனாரின் வாரிசு

சான்றிதழை வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதில் என்னை சேர்க்காமல் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ஆகையால் அந்த வாரிசு சான்றிதழை நான் ரத்து செய்து விட்டேன் என்றால் சரிதான். ஏற்கனவே வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் ரத்து செய்த பிறகு புதிதாக வாரிசு சான்றிதழ் கோரி நான் விண்ணப்பம் செய்யவில்லை என்றால் விண்ணப்பம் கொடுத்தேன் சரியாக பதில் அளிக்காததால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றும் நான் சொல்வது போல் விண்ணப்பம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஜீவானந்தத்தின் பெற்றோர்களைப் பற்றிய உரிய விபரத்தை கூறாததாலும் உரிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காததாலும் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்க விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.